# SUBRAMANYA SHRINES

## IN TAMIL

BY

**P. SAMBANDAM, B.A., B.L.**

**AUTHOR OF**

THE Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, The Ideal Wife, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At any Cost, The Fair Ghost, Brahmin *vs* Non-Brahmin, Vijayarangam, As you Like it, Sati Sulochana, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari. The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathy Part II, A Rehearsal or Sabapathy Part III, Sabapathy Part IV, Mixture, Blessed in a Wife, The Dancing Girl, Subadra-Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's Prescription Vichu's Wife, Sakuntala, Vikramorvasi. The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa, As We Sow So We Reap, Over Forty Years Before the Footlights Parts I, II, III, IV, V & VI, The Search, Prince Koneri, The Crowd in the Shandy, Ratnavali, The Gypsy Girl, Vaikunta Vaithiyar, Dikshithar Stories, Funny Stories, The Good Sister, Short Stories, Hints to Actors, The Tamil Drama, Humorous Essays, A hand book for Tamil Talkies, Stray Flowers, The Wedding of Valli, Talkie Experiences, The Dead revived, Asthanapura Dramatic Company, Music-Mad, Sabapathi-Zamindar, Nine Playlets, Sati-Sakti, Maniatchi Indian vs Hitler in Tamil; and Harischandra, and Yayathi in English.

---

FIRST EDITION

**MADRAS.**

**1947**

*All rights reserved.*] [*Price* [redacted]

# சுப்பிரமண்ய ஆலயங்கள்.

நாடகப் பேராசிரியர்

ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :

லீலாவதி-சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச் சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பியவிதமே, சிறுத்தொண்டர், காலவ ரிஷி, ரஜபுத்திரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் ஆறுபாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுரவணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டுபிடித்தல், கோனேரி அரசகுமரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லத்தங்காள், சிறு கதைகள், நடிப்புக் கலையில் தேர்ச்சிபெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ்பேசும் படக்காக்ஷி, விடுதிப்புஷ்பங்கள், பேசும் பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச்சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், சதி சக்தி, மனை ஆட்சி, சிவாலயங்கள் இந்தியாவிலும் அப்பாலும், சிவாலய சிற்பங்கள், இந்தியனும், ஹிட்லரும், முதலியன.

---

முதற்பதிப்பு

காபிரைட் 1947 [விலை

பம்மல் - விஜயரங்க முதலியார்
பம்மல் - மாணிக்கவேலம்மாள்
ஆகிய
என் தந்தை தாயர் ஞாபகார்த்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது.

# முகவுரை

சிவஞானம் முதிர்ந்த சிவபக்தர்கள், பரமசிவம் வேறு, பாலசுப்பிரமண்யம் வேறு, என்று பிரிப்பதில்லை ; ஆயினும் லௌகிகத்தில், சிவநேயர்கள் இரண்டையும் வெவ்வேறாகப் பிரித்து வழிபட்டு வருகின்றனர். இக்காரணம்பற்றியே, பெரிய சிவாலயங்களில், பரமசிவத்தின் லிங்க மூர்த்திக்கு வேறு சந்நிதியும், முருகருக்கு வேறு சந்நிதியும் அமைக்கப் பட்டிருக்கிறது; இப்பிரிவினைக் கருதியே, எனது "சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும்" எனும் நூலில், கோயில்களில், முக்கிய காப்பக்கிரஹங்களில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஆலயங்களை சிவாலயங்கள் எனப் பிரித்து எழுதியுள்ளேன். இச்சிறு நூலில், கோயில்களில் முக்கிய கர்ப்பக் கிரஹங்களில், சுப்பிரமண்ய ஸ்வாமியை பிரதிஷ்டை செய்திருக்கும் இடங்களை, சுப்பிரமண்ய ஆலயங்களாகப் பிரித்துக் குறித்திருக்கிறேன்.

முருகர், ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன் தமிழர்கள் வழிபட்டுவந்த தெய்வமாம்; ஆகவே, ஏறக்குறைய எல்லா முருகர் ஆலயங்களும், தென் இந்தியாவிலேயே உள்ளன. வட இந்தியாவில் முருகர் ஆலயங்கள் இல்லையென்றே ஒருவாறு கூறலாம்; ஆகவே எல்லா முருகர் ஆலயங்களும் திராவிட சில்பம் உடையன என மதிக்கலாம்.

ஆதிகாலத்தில் தமிழ் நாடுகளிலுள்ள மலைகள் மீதும் குன்றுகள்மீதும் இருந்த ஆலயங்கள் பெரும்பாலும் முருகர் ஆலயங்களாயிருந்தன என்பதற்கு ஐயமில்லை. "குன்றுதோறாடல்" எனும் சொற்றொடரைக் காண்க. தொல்காப்பியத்தில் "சேயோன் மேய மைவரை உலகமும்" என்றிருக்கிறது. இதனால் குறிஞ்சி நிலக் கடவுள் முருகர் என்பது வெளியாகிறது.

எல்லா சுப்பிரமண்ய ஆலயங்களிலும், அம்மன்களின் பெயர், வள்ளி தெய்வயானை என்றே இருப்பதால், அதை

இந்நூலில் குறித்திருக்கும் ஒவ்வொரு ஸ்தலத்திலும், குறிக்காமல் விட்டேன்.

ஸ்தல யாத்திரை செய்யும் சிவபக்தர்களுக்கு இந்நூல் ஒரு சிறிதாவது உபயோகப்படுமாக-எல்லாம் வல்ல இறைவன் அருளால்!

ப. சம்பந்தம்

# சுப்பிரமணிய ஆலயங்கள்.

**அத்திக்கரை** :—திருச்சிராப்பள்ளி ஜில்லா-சுப்பிரமண்யஸ் தலம்-திருப்புகழ் பெற்றது.

**அத்திப்பட்டு** :—திருச்சிராப்பள்ளி ஜில்லா-சுப்பிரம்மண்யஸ் தலம்- திருப்புகழ் பெற்றது.

**அருக்கோண மலை** :—இலங்கைத்தீவிலுள்ளது-சுப்பிரம் மண்யஸ்தலம்.

**அன்னியூர்** :—மாயவரம் தாலூகா-தஞ்சாவூர் ஜில்லா-திருமணச்சேரிக்கு அருகிலுள்ளது-சுப்பிரமண்யஸ்தலம்-திருப்புகழ்பெற்றது.

**ஆண்டார் குப்பம்** :—தென் இந்தியா ரெயில் ஸ்டேஷனாகிய பொன்னேரிக்கு $2\frac{1}{2}$ மைல் தூரம் - சுப்பிரம்மண்யஸ் தலம்-திருப்புகழ் பெற்றது.

**ஆயக்குடி** :—திருநெல்வேலி ஜில்லா-சுப்பிரம்ம ண்யஸ் தலம்-திருப்புகழ்பெற்றது.

**ஆவினன்குடி** :—திண்டுக்கல் தாலூகா-மதுரை ஜில்லா-திண்டுக்கல்லுக்கு 37 மைல்-பழனிமலையடிவாரத்திலுள்ளது-நக்கீரர்பாடிய திருமுருகாற்றுப் படையில் ஒரு படைவிடு-சுப்பிரம்மண்யஸ் தலம்-இங்கு முருகர் மயில் மீது ஆரோகணித்த பாலசுப்பிரம்மண்யராகக் காட்சி அளிக்கிறார்-பழயகோயில்-கி.பி. 1910ஆம் வருஷம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது-தீர்த்தம், சரவணப் பொய்கை - ஸ்தலவிருட்சம் - நெல்லி-பிரம்மோற்சவம் பங்குனிமாசம்- ஐப்பசி மாசத்திலும் தை மாசத்திலும் 10 நாட்கள் உற்சவம் உண்டு.

**ஆறவட்டி** :—கன்னட தேசத்திலுள்ள சுப்பிரம்மண்யஸ் தலம்-திருப்புகழ் பெற்றது.

**இடைக்கழி** :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, மாயவரம் தாலூகா சுப்பிரம்மண்யஸ் தலம்-திருப்புகழ் பெற்றது.

**இந்தம்பலம்** :—தென் ஆற்காடு ஜில்லா-மதுராந்தகம் தாலூகா சுப்பிரம்மண்யஸ் தலம்-திருப்புகழ் பெற்றது.

**இலஞ்சி** :—திருநெல்வேலி ஜில்லா-குமாரஸ்வாமி கோயில்.

**இளையனூர் வேளூர்** :—செங்கல்பட்டு ஜில்லா-திருமாகறலுக்கு அருகிலுள்ளது-ஸ்ரீபால சுப்பிரம்மண்யர் கோயில்-திருப்புகழ் பெற்றது-சித்திரை மாதம் திருவூரல்-திருப்புகழ்பெற்றது

**ஊதிமலை** :—கோயமுத்தூர் ஜில்லா-சுப்பிரம்மண்யஸ்தலம்-திருப்புகழ் பெற்றது.

**எட்டிகுடி** :—நாகபட்டினம் தாலூகா-தஞ்சாவூர் ஜில்லா-திருவாய்மூருக்கு அருகிலுள்ளது. முருகர்ஆலயம்-திருப்புகழ்பெற்றது.

**எண்கண்** :—நாகபட்டினம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா-குரடாச் சேரிக்கு அருகிள்ளது-முருகர் ஆலயம்-திருப்புகழ்பெற்றது.

**எழுகரை நாடு** :—குடகுதேசத்திலுள்ளது-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**ஏரகம்** :—(திரு) தற்காலம் சுவாமி மலை எனவழங்கப்படுகிறது-தென் இந்தியா ரெயில்ஸ்டேஷன்-தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணத்திற்கு 4 மைல்-முருகர் ஆலயம்-நக்கீரர் எழுதிய திருமுருகாற்றுப்படையிலுள்ள 6 படைவீடுகளில் ஒன்று. கோயில் கட்டுமலைமீது இருக்கிறது-முருகர் பரமசிவத்திற்கு பிரணவமந்திரத்தை உபதேசம் செய்த ஸ்தலம்-இங்கு சந்நிதியில் மயிலுக்குப் பதிலாக தேவேந்திரனுடைய யானை யாகிய ஐராவதம் இருக்கிறது. முக்கிய உற்சவம் தை மாதம், பங்குனி மாதம் வேடர்பறி உற்சவமும் வள்ளி திருமணமும்.-மூலஸ்தானத்தில் பழனி ஆண்டவர்.

**ஒடுக்கத்து சேரிவாய்** :—ஜோலார்ப்பேட்டைக்கு அருகிலுள்ளது-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**கடிசுப்பிரம்மணியம்** :—மைசூர் ராஜ்யம்-மல்லிதுர்கத்திலிருந்து 3 மைல் - சஷ்டி உற்சவத்தில் ரதோற்சவம் விசேஷம்-ஸவாமி சுப்பராயர்-திருப்புகழ் பெற்றது.

**கதிர்காமம்** :—இலங்கைத் தீவிலுள்ளது, பாடுல்லா ஜில்லாவில் காட்டு மத்தியில்-முருகர் ஆலயம்-சுமார்2050 வருடங்களுக்குள் தத்தகாமினி எனும் சிங்களமன்னன் இங்குள்ள குகைக் கோயில் ஏற்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது-ஆடிமாதம் வேல் உற்சவம் விசேஷம்-கதிரன் என்பது முருகர் பெயர் என்பர், ஆகவே கதிர்காமம் எனப்பெயர் பெற்றது. திருப்புகழ்பெற்ற ஸ்தலம்-மஹாவம்சோ எனும் சிங்களகிரந்தத்தில் இங்கு ஸ்கந்தருடைய ஆலயம் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது-கி.மு. 300 ஆம் ஆண்டில்—குகைக் கோயில்-சுப்பிரம்மணியருடைய உருவம் திரையில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது-தற்காலம் ஆலயம் பௌத்தர்களுடைய வசத்தி லிருக்கிறது-போகும் வழி, கொழும்பி லிருந்து 120 மைல் தூரமிருக்கும் ரெயில் ஸ்டேஷனுக்குப் போய், அங்கிருந்து 60 மைல் தூரமிருக்கும் திஸ்ஸாராமா எனும் ஊருக்கு, மோடார்காரிலாவது பஸ் மூலமாவது போய், அங்கிருந்து 10 மைல், காடுவழியாக கால் நடை யாகப் போகவேண்டும்; கட்டைவண்டிகள் சில சமயங்களில் கிடைக்கும், கோயிலருகில் பொய்ச் சேர 3 மணி நேரம் பிடிக்கும்.

**கந்தன்குடி** :—மாயவரம் தாலூகா-தஞ்சாவூர் ஜில்லா பேரளம் ஜங்க்ஷனுக்கு அருகிலுள்ளது-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**கந்தனூர்** :—புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ளது. முருகர் ஆலயம், திருப்புகழ் பெற்றது.

**கம்பை** :—பர்மாவின் கீழ்பாகமிருக்கும் ரங்கூன் பட்டணத்திற்கு அருகிலுள்ளது. பர்மா தேசத்தில் இதுதான் பெரிய முருகர் ஆலயம். சித்ரா பௌர்ணமியில் உற்சவம் விசேஷம்.

**கரபுரம்**:—(திரு) சுப்பிரமண்ய ஸ்தலம்-சென்னை ராஜதானி

**கரியவனகர்**:—சீர்காழி தாலுகா-தஞ்சாவூர் ஜில்லா-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**கழுகுமலை:**—திருநெல்வேலி ஜில்லா-முருகர் ஆலயம்-குகைக் கோயில்-சுமார் கி. பி. 725-750 க்குள் செதுக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. கோயிலில் சில ஜைன விக்ரகங்களு மிருக்கின்றன - மகாபலிபுரக் குகைக் கோயிலைப் போன்ற கோயில் இது.

**கனகமலை:**—திருப்பத்தூருக்கு அருகிலுற்றது-முருகர் ஆலயம், திருப்புகழ் பெற்றது.

**கன்னபுரம்:**—நன்னிலம் தாலூகா-தஞ்சாவூர் ஜில்லா - முருகர் ஆலயம், திருப்புகழ் பெற்றது.

**காங்கேயநல்லூர்:**—சென்னை ராஜதானி - முருகர் ஆலயம். மாசி மாதம் வேடர்பறி உற்சவம் விசேஷம்.

**காங்கேயம்:**—அல்லது சிங்கை - கோயமுத்தூர் ஜில்லா-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**காஞ்சீபுரம்:**—குமரகோட்டம்-முருகர் ஆலயம். பழைய பல்லவ கட்டடம்-திருப்புகழ் பெற்றது. பிரம்மோற்சவம் வைகாசி மாதம்-முருக்கடி சேர்வை விசேஷம்.

**காமத்தூர்:**—வடஆற்காடு ஜில்லா - முருகர் ஆலயம் - திருப்புகழ் பெற்றது.

**காவனூர்:**—தஞ்சாவூர் ஜில்லா-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**குமரன்கோயில்:**—குமரகிரிமலை - சேலம் ஜில்லா - முருகர் ஆலயம்.

**குமரனடிமலை:**—மதுரை ஜில்லா-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**குராவடி:**—சென்னை ராஜதானி-முருகர் ஆலயம்.

**குருடிமலை:**—கோயமுத்தூர் ஜில்லா-முருகர் ஆலயம்- திருப்புகழ் பெற்றது.

**குளந்தைநகர்:**—அல்லது பெரியகுளம் - மதுரை ஜில்லா திண்டுக்கல்லுக்கு அருகிலுள்ளது - முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**குறட்டி:**—திருச்சிராப்பள்ளி ஜில்லா-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**குறுக்குத்துறை:**—திருநெல்வேலி ஜில்லா-திருநெல்வேலியில் தாம்ரபர்ணி நதியின் மத்தியில் உள்ளது - முருகர் ஆலயம்-நதிப் பெருக்கெடுத்தால் உற்சவமூர்த்தியின் விக்ரஹம் முதலியவற்றை கரையோரம் கொண்டுபோய் வைத்துப் பாதுகாக்கின்றனர். சித்திரை மாதம் பெரிய உற்சவம்-இந்த க்ஷேத்திரத்திற்கு திருஉருமாமலை யென்றும் பெயர், இரண்டுமுறை திருச்செந்தூருக்கு சுப்பிரமண்யர் திருவுருவம் இங்கிருந்து கொண்டுபோகப்பட்டதாம். பிரம்மோற்சவத்தில் 7-வது நாள் உருத்திர தரிசனம்-8 வது நாள் காலையில் பிரம தரிசனம். வெள்ளைச் சாத்துப்படி-மாலையில் விஷ்ணு தரிசனம், பச்சை சாத்துப்படி.

**கூந்தலூர்:**—மாயவரம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா—முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது, பூந்தோட்டம் ரயில் ஸ்டேஷனிலிருந்து போகலாம்.

**கொங்கணகிரி:**—சேலம் ஜில்லா, திருப்பத்தூர் தாலூகா முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**கொடுமுடி:**—கொங்குநாடு, முருகர் ஆலயம் - திருப்புகழ் பெற்றது.

**கொல்லிமலை:**—திருச்சிராப்பள்ளி ஜில்லா, முருகர் ஆலயம்.

**கோடம்பாக்கம்:**—சென்னைக்கு 5-மைல் தூரம் உள்ளது. வட பழனியாண்டவர் கோயில், சுமார் 50 வருடங்களுக்குமுன் ஏற்பட்டது. பழனியாண்டவர் சந்நிதி.

**கோடைநகர்:**—செங்கற்பட்டுஜில்லா, காஞ்சீபுரம் தாலூகா முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**சண்பைநகர்:**—முருகர் ஆலயம்.

**சிக்கல்:**—தஞ்சாவூர் ஜில்லா, தென்னிந்தியா ரயில்ஸ்டேஷன்-நாகப்பட்டினத்துக்கு அருகிலுள்ளது. தீர்த்தம்-மாண்டு குளம், கோயிலுக்கு பின்புறம் உள்ளது-காமதேனுவின் பாலால் உண்டானதென்பது ஐதிகம் - அற்பசி மாதம் நடக்கும் சூரசம்மார உற்சவமும் சக்திவேல் உற்சவமும் விசேஷம்.

**சிறுவை:**—தென் ஆற்காடு ஜில்லா, முருகர் ஆலயம் - திருப்புகழ் பெற்றது.

**சுப்பிரமண்யம்:**—கன்னடதேசம், மைசூரிலிருந்து 10-மைல் சுவாமியின் பெயர், சுப்பிரமண்யர் - மார்கழி மாதம் ரதோற்சவம் விசேஷம்.

**செஞ்சி:**—தென் ஆற்காடு ஜில்லா முருகர் ஆலயம் - திருப்புகழ் பெற்றது.

**செந்தூர்:**—(திரு) திருச்சீரலைவாய் என்னும் பூர்வீக பெயர் பெற்றது. தென் இந்தியா ரயில்வேஸ்டேஷன்-திருமுருகாற்றுப்படையிலுள்ள ஆறுபடை வீடுகளில் ஒன்று-முருகர் ஆலயம். திருநெல்வேலியிலிருந்து 35 மைல், பெரிய உற்சவங்கள், ஆவணி, மாசி, மாதங்களில் - அப்பர் தேவாரத்தில் இவ்வூரைக் குறிப்பிட்டிருக்கிறார். வள்ளி மணம் ஆடிமாதம், தெய்வயானை மணம் ஐப்பசி மாதம். கோயில் ஒரு சிறுகுன்றின் மீது கட்டப்பட்டிருக்கிறது. வேலாயுததீர்த்தம் - இதற்கு அருகாமையில் இருக்கும் குகையில் தத்தாத்திரியர் கோயிலுண்டு. கோயில் உக்கிரபாண்டியனால் கட்டப்பட்ட தென்பர். இங்கு புதிதாய் ஒரு சன்யாசியால் கட்டப்பட்ட ஷண்முகவிலாசமென்னும் மண்டபம் பார்க்கத்தக்கது. 120 × 36 அடி, 124-தூண்கள் உடையது. இக் கோயிலிருக்கும் பிள்ளையாருக்கு தூண்டி விநாயகர் என்று பெயர். கோயில் ரயில்வேஸ்டேஷனுக்கு 4 மைல். சூரபத்மனைக் கொல்ல முருகர் சிவபெருமானை வழிபட்ட ஸ்தலம். இக் கோயில்சுற்றுப்பிரகாரத்திற்கு பாம்பறை என்றுபெயர் இங்குவெங்கடேசப் பெருமாள் சந்நிதியுண்டு-பத்பநாபஸ்வாமியும் மகாலட்சுமியும் மலையில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றனர். சுப்பிரமண்யர் சந்நிதி கிழக்கு பார்த்தது; அவரது இடப்புறம் செந்தில் நாயகர் (உற்சவ மூர்த்தி) எழுந்தருளியிருக்கிறார். இதன்றி ஷண்முகர் சந்நிதி பிரத்யேகமாயுண்டு. இங்கு பூஜை செய்பவர்கள் சிவாசாரியர்கள்.

சுப்பிரமண்யர் சந்நிதியில் தென்கன்னடம் மத்துவ போத்திகள் பூஜை செய்கின்றனர். கோபுரம் 9 நிலைகள்

உடையது, 136 அடி உயரம்; சுமார் 300 வருடங்களுக்கு முன் தேசிகமூர்த்தி தம்பிரானால் கட்டப்பட்டது; இங்கருகாமையிலுள்ள நாழிக்கிணறு பார்க்கத் தக்கது. சுற்றிலும் இருப்பது உவர்நீராயினும் நாழிக்கிணற்று ஜலம் சுத்தமானது - வெண்மை நிறமுடையது; கிணறு 1 அடி சதுரம்: சுற்றிலும் 14-அடி சதுரம். தத்தாத்ரியர் கோயிலருகில் வள்ளிக் குகையுளது.

**சென்னபட்டணம்** :—செங்கல்பட்டு ஜில்லா-இங்குள்ள முருகர் ஆலயங்கள் (1) ஸ்ரீ கந்தசாமி கோயில் ஜார்ஜ் டவுனில் சைனுபஜார் வீதியில் உளது.-சுவாமி முத்துகுமாரஸ்வாமி; பிரம்மோற்சவம் தைமாசம், கைலாசகிரி உற்சவம் விசேஷம்; வசந்தோற்சவம் வைகாசி மாசம். சென்னை பேரி செட்டிமார்கள் பரிபாலனம், (2) வாணிய சுப்பிரமணியர் கோயில்-எஸ்பிளநேட் ரோட்டிலிருக்கிறது. பிரம்மோற்சவம் தைமாசம், வாணிய செட்டிமார்கள் பரிபாலனம் (3) சுப்பிரமணியர் கோயில் தங்கசாலை வீதி, (4) சிந்தாதிரிபேட்டை பட்டு நூல்காரர்கள் சுப்பிரமணியர் கோயில்,

**சென்னிமலை** :—கோயமுத்தூர் ஜில்லா-சுப்பிரமணியர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**சேயூர்** :—செங்கல்பட்டு ஜில்லா-முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**சோமேஸ்வரம்** :—துளுவ நாட்டிலுள்ளது, முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**சோலைமலை** :—இதற்கு ஸ்ரீபுருடமங்கை என்றும் பெயர்-சுப்பிரமண்யர் ஆலயம்.

**ஞானமலை** :—திருப்பத்தூர் தாலூகா-முருகர் ஆலயம், திருப்புகழ் பெற்றது.

**தஞ்சாவூர்** :—மேற்படி ஜில்லா பால தண்டாயுதஸ்வாமி ஆலயம்-கார்த்திகை தீபம் விஷேசம்.

**தனிச்சயம்** :—மதுரை ஜில்லா-முருகர் ஆலயம், திருப்புகழ் பெற்றது.

**திருத்தணி** :—அல்லது திருத்தணிகை. சூரபத்மனை வென்ற பிறகு கோபம் தணிந்த ஸ்தலமாதலால் திருத்தணிகை எனப் பெயர்பெற்றது. மதராஸ் ரெயில் ஸ்டேஷன். கோயில் ஒரு சிறு குன்றில், ஸ்டேனுக்கு 1 மைலிலிருக்கிறது. இரண்டு பெரிய உற்சவங்கள்-தை மாசம்-ஆடி மாசம். இங்கு பல சத்திரங்கள் உண்டு. மலை ஏற 365 படிகள் கட்டப்பட்டிருக்கின்றன-ஜனவரி மாசம்முதல் தேதி திருப்புகழ் பாராயணம் செய்துக் கொண்டு பல பக்தர்கள், ஒரு திருப்புகழுக்கு ஒருபடியாக, ஏறிச் செல்கின்றனர். மலையடிவாரத்தில் சரவணப் பொய்கை எனும் குளம் உளது. ஸ்வாமிக்கு செங்கல்வராயர் எனும் திருநாமம். செங்கலுவம்—செங்கழுநீர்ப் புஷ்பம், ஆடி மாசம் தெப்பல் உற்சவம், சித்திரை மாசம் தேவசேனை கல்யாணம்.

**திரியம்பகபுரம்** :—மாயவரம் தாலூகா-தஞ்சாவூர் ஜில்லா முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**திருப்பதி** :—மதராஸ் ரெயில் ஸ்டேஷன். வடஆற்காடு ஜில்லா-இது ஆதியில் முருகர் ஆலயமாக இருந்ததென்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு. அருணகிரிநாதர் இந்த ஸ்தல தெய்வத்திற்கு திருபுகழ் பாடி யிருக்கிறார். ஆதியில் இங்கிருந்த மூல விக்ரஹம் விஷ்ணுவின் விக்ரஹம் அல்லவென்று வைஷ்ணவர்களே ஒப்புக்கொள்கின்றனர். வடக்கிலிருந்து வரும் யாத்திரீக ஜனங்கள் இந்த விக்ரஹத்தை இன்றும் பாலாஜி என்றே அழைக்கின்றனர்.

**திருமலை** :—திருநெல்வேலி ஜில்லா-குற்றாலத்திற்கு 10 மைல் தூரம்-முருகர் ஆலயம், ஸ்வாமி பால சுப்பிரமணியர்-திருவின்கேள்வனை முகுந்தனால் இம்மலை சிருஷ்டிக்கப்பட்டபடியால் திருப்பதிஎனும் பெயர்பெற்ற தென்பர்-தீர்த்தம் திருக்குவளைச்சுனை-மலைமீதேற சுமார் 1000 படிகள் உள.

**தீர்த்தமலை** :—மலையாள தேசம் மோர்பூர் ஜங்ஷனுக்கு அருகிலுள்ளது. முருகர் ஆலயம்-திருப்புகழ்பெற்றது.

**துறையூர்** :—(திரு) தென் ஆற்காடு ஜில்லா முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**தென்மலை** :—திருநெல்வேலி ஜில்லா-தென்காசிக்கு அருகிலுள்ளது, முருகர் ஆலயம்.

**தென்சேரிகிரி** :—கோயமுத்தூர் ஜில்லா-முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**தேவனூர்** :—வடஆற்காடு ஜில்லா-விரிஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ளது-முருகர் ஆலயம். திருப்புகழ்பெற்றது.

**தொழுப்பேடு** :—செங்கற்பட்டு ஜில்லா-முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**நிம்மபுரம்** :—துளுவ நாட்டிலுள்ளது-முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**நெருவூர்** :—திருச்சிராப்பள்ளி ஜில்லா-முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**பட்டாலியூர்** :—கோயமுத்தூர் ஜில்லா-முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**பரங்குன்றம்** :—(திரு)-மதுரையிலிருந்து 4 மைல் தென்மேற்கு; தென்இந்தியா ரெயில் ஸ்டேஷன். குன்று சமுத்திர மட்டத்திற்கு 1050 அடி உயரம். முருகர் ஆலயம்-கர்ப்பக்கிரஹம் மலையில் செதுக்கப்பட்டிருக்கிறது மூன்று அறைகள் உள; நடுவில் துர்க்கை, வடக்கில் விநாயகர்; தெற்கில்இருப்பது தேவசேனாசமேத சுப்பிரமண்ய மூர்த்தியாகத் தொழப்படுகிறது. இச்சிலை உருவம் சதாகாலம் மூடப்பட்டிருக்கிறது. உண்மையில் இவ்வுருவம் ஜேஷ்டா தேவியின் உருவம் என்று டாக்டர் மீனாட்சி அம்மை கூறி யிருக்கிறார்கள். சுப்பிரமண்யர் தெய்வயானையை மணந்த ஸ்தலம் என்பது புராணம்; இங்கு வள்ளியம்மைக்கு கோயிலில்லை. உற்சவ மூர்த்திக்கு தேவசேனா ஒரே அம்மன்தான் - திருப்புகழ் பெற்ற ஸ்தலம். பிரம்மோற்சவம் பங்குனி மாசம், தேவசேனா திருக் கலியாண உற்சவம் விசேஷம்; இதற்கு மதுரையிலிருந்து மீனாட்சி சுந்தரேஸ்வரர் எழுந்தருளுகி

ருர். கோயில் திராவிட சில்பம், நாயக்கர் காலத்தியது; குகைக்கோயில் பாகம் மிகவும் புராதனமானது, பல்ல வக் குகைக் கோயில்களைப் போன்றது. இக்கோயில் சில சமயங்களில் கோட்டையாக உபயோகிக்கப்பட்டி ருக்கிறது. நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் முதலா வதாகப் பாடியிருக்கிறுர்-தீர்த்தம் சரவணப் பொய்கை. சைவ சமயாசாரியர்கள் இத்தலத்தை சிவாலயமாகப் பாடி யிருக்கிறுர்கள்.

**பழமுதிர்சோலை** :—மதுரைக்கு வடக்கு 12 மைல், தற்காலம் அழகர் கோயில் என்று வழங்கப்படுகிறது. நக்கீர ருடைய திருமுருகாற்றுப்படையில் ஆருவது படை வீடு. இங்கிருந்த சுப்பிரமண்ய ஆலயம் அழிக்கப்பட்டி ருக்கிறது. தீர்த்தத்தின் பழய பெயர் புண்ணிய சரவ ணம்·சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது.

**பழனி**:—மதுரை ஜில்லா-திண்டுக்கல்தாலூகா-ரெயில் ஸ்டே ஷன், குன்றத்தின்மீது பழனி ஆண்டவர் கோயில். மலை கடல் மட்டத்திற்கு 1068 அடி உயரம். குளத்திற்கு வையாபுரிக் குளம் என்று பெயர், மலைக்கோயில் சுமார் 9 ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்டதாக திருவா ளர் சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் கூறுகிறுர் - கோயி லில் 8 கல்வெட்டுகள் உள. அவற்றுள் பூர்வீகமானது 13 ஆம் நூற்றுண்டில் ஆண்ட கோனேரின்மைகொண் டான் வீரபாண்டிய தேவனுடையதாகும். மைசூர் வீர நஞ்ச உடையார் காலத்திய கல்வெட்டொன்றுளது. கிருஷ்ணதேவராயர் காலத்திய கல்வெட்டும் ஒன்றுண்டு. மலை சுற்றுப் பிரகாரம் 1¼ மைல். மலையடிவாரத்தில் பக்த விநயகர் கோயில் இருக்கிறது. மலைமேல்போகும் வழியில் சேர விநயகர் கோயில்-அதற்கப்புறம் இடும் பன் கோயில். கோயிலில் மணிக்கட்டு மண்டபம், நவ ரங்கம் முதலிய பல மண்டபங்கள் உள. ராஜகோபுரம் 5 நிலை உடையது-42 தூண்கள் கொண்ட மாரவேல் மண்டபம் பார்க்கத்தக்கது. இங்குள்ள சிவ சந்நிதிக்கு மலைக்கொழுந்து சிவம் என்றும், தேவிக்கு மலை நாச்சி

அம்மன் என்றும் பெயர். பழனி ஆண்டவர் சிலைபோக முனிவரால் ரசக்கட்டால் செய்த நவ பாஷாணம் என்பர்-போகர் சந்நிதி மலைமிது உட்பிராகரத்து தென் மேற்கு மூலையிலிருக்கிறது. ஆண்டவர்க்கு பஞ்சாமிர்த அபிஷேகம் விசேஷம், பழனி பஞ்சாமிர்தம் பல மாசங்கள் கெடாமல் இருக்கும். தை மாசம் பிரம்மோத்சவம். தைப்பூசத்தன்று நூற்றுக்கணக்காக காவடிகள் செலுத்தப்படுகின்றன,

**பாக்கம்** :—செங்கல்பட்டு ஜில்லா-முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**பாகை** :—சீர்காழி தாலூகா-தஞ்சாவூர் ஜில்லா-முருகர் ஆலயம். திருப்புகழ் பெற்றது.

**பான்போலி** :—திருநெல்வேலி ஜில்லா-திருமலை-முருகர் ஆலயம்.

**பிரான்மலை** :—திண்டுக்கல் தாலூகா-மதுரை ஜில்லா-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

**புகழிமலை** :—கருநாடுக்கு அருகிலுள்ளது. கொங்குதேசம். முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**புல்லாம்பாக்கம்** :—செங்கல்பட்டு ஜில்லா-திருவள்ளூருக்கு அருகிலுள்ளது. குமாரஸ்வாமி கோயில். வைகாசி உற்சவம் விசேஷம்.

**புளியங்குடி** :—அல்லது **புளியமாநகர்** - சங்கரன்கோயில் தாலூகாவிலுள்ளது. பாலசுப்பிரமணியர் ஆலயம். அகஸ்தியருக்கு காட்சி அளித்த ஸ்தலம். இங்கு அகஸ்தியருக்கு கோயிலுண்டு.

**பூம்பறை** :—திண்டுக்கல் தாலூகா-மதுரை ஜில்லா-முருகர் ஆலயம், திருப்புகழ் பெற்றது,

**பூவாளூர்** :—திருச்சிராப்பள்ளி ஜில்லா-லால்குடி ரெயில் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது. முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**பெங்களூர் :**—மைசூர் ராஜ்யம்-முருகர் ஆலயம். சக்கனராவ் என்பவரால் புதிதாய்க் கட்டப்பட்டது. கார்த்திகை மாசம் வெள்ளி ரத உற்சவம் விசேஷம்.

**பெரியகுளம் :**—மதுரை ஜில்லா-முருகர் ஆலயம். திருப்புகழ் பெற்றது.

**பெருங்குடி :**—நாகப்பட்டினம் தாலூகா-தஞ்சாவூர் ஜில்லா-திருவாரூருக்கு அருகிலுள்ளது. முருகர் ஆலயம். திருப்புகழ்பெற்றது.

**பெரும்புலியூர் :**—திருச்சிராப்பள்ளி ஜில்லா-முருகர் ஆலயம் திருப்புகழ்பெற்றது.

**பேறைநகர் :**—தென் ஆற்காடு ஜில்லா-முருகர் ஆலயம். திருப்புகழ் பெற்றது.

**பொதியமலை .**—திருநெல்வேலி ஜில்லா-முருகர் ஆலயம். திருப்புகழ் பெற்றது.

**போரூர் :**—(திரு) செங்கற்பட்டு ஜில்லா-வண்டலூர் ஸ்டேஷனிலிருந்து போக வேண்டும். பகிங்காம் கால்வாய் வழியாகவும் படகிலேறிப் போகலாம். படகு நிற்குமிடமிருந்து ஒரு மைல் கால் நடையாகப் போக வேண்டும். முருகர் ஆலயம், சுமார் 300 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது, சூரபத்மனைப் போரில் வென்ற ஸ்தலமாதலால் திருப்போரூர் எனப் பெயர் பெற்றது.

**மருத்துவங்குடி :**—கும்பகோணம் தாலூகா-தஞ்சாவூர்-ஜில்லா முருகர் ஆலயம். திருப்புகழ் பெற்றது.

**மயேந்திரம் :**—சீர்காழி தாலூகா-தஞ்சாவூர் ஜில்லா-முருகர் ஆலயம், திருப்புகழ் பெற்றது.

**மாடம்பாக்கம் :**—செங்கற்பட்டு ஜில்லா-பல்லாவரம் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது. முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

**முருகன்பூண்டி :**—(திரு) கொங்குநாடு. முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

மைலம் :—தென் ஆற்காடு ஜில்லா-தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், திண்டிவனத்திற்கு அடுத்தாற்போலுள்ளது. சிறுகுன்றின்மீது முருகர் ஆலயம். இங்கு ரதோற்சவம் விசேஷம். இங்கு பல சத்திரங்களுண்டு,

யாழ்ப்பாணம் :—இலங்கைத் தீவிலுள்ளது. சுப்பிரமண்ய ஸ்தலம்.

ரங்கூன்:—பர்மா ராஜ்யத்திலுள்ளது. சுப்ரமண்யர் கோயில். தென்னுட்டிலிருந்து அங்கு போன நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் கட்டப்பட்டது. புதிய கோயில். ரதோற்சவம் விசேஷம்.

ராமநாதபுரம் :—கன்னட தேசம். சாலிக்கிராமத்திலிருந்து 15 மைல்-சுப்பிரமண்ய ஸ்தலம். சுவாமி பெயர் சுப்பராயர்-மார்கழி சஷ்டி உற்சவம் விசேஷம்.

ராயவேலூர் :—வட ஆற்காடு ஜில்லா-முருகர் ஆலயம்.சஷ்டி உற்பவம் விசேஷம்.

ராஜகெம்பீரம் :—மானுமதுரை தாலூகா-ராமனுதபுரம் ஜில்லா-முருகர் ஆலயம். திருப்புகழ் பெற்றது.

ராஜபுரம் :—சேலம் ஜில்லா-சேலம் பட்டணத்திற்கு அருகிலுள்ளது. முருகர் ஆலயம். திருப்புகழ் பெற்றது.

ரெட்டிக்குடி :—சென்னை ராஜதானி-சுப்பிரமண்ய ஸ்தலம்.

வடுகூர் :—விழுப்புரம் தாலூகா-தென் ஆற்காடு ஜில்லா சுப்பிரமண்ய ஸ்தலம்.

வழுவூர் :—மாயவரம் தாலூகா-தஞ்சாவூர் ஜில்லா-மாயவரம் பட்டணத்திற்கு அருகிலுள்ளது. முருகர் ஆலயம் திருப்புகழ் பெற்றது.

வள்ளிமலை :—சித்தூர் ஜில்லா-காட்பாடி ஜங்ஷனுக்கு அருகிலுள்ளது. ஆதியில் ஜைனர் கோயிலாயிருந்து பிறகு சுப்பிரமண்யர் கோயிலாக மாற்றப்பட்டதாக எண்ணப்படுகிறது.

வள்ளியூர் :—திருநெல்வேலி ஜில்லா-நாங்குநேரி தாலூகா-நாகர் கோயிலுக்குப் போகும் வழியிலுள்ளது. இது தான் வள்ளியை மணந்த ஸ்தலம் என்பது புராணம். இதற்கு பூரணகிரி என்றும் பெயர். முருகர் ஆலயம்.

ஸ்தல விருட்சம் கடம்பம். தீர்த்தம் வள்ளியாறு. இவ்வூருக்கு வல்லிமாநகர் என்றும் பெயர். வள்ளியின் அம்சமாகிய வல்லியை மணந்த ஸ்தலம் என்பர்.

வாகை:—வட ஆற்காடு ஜில்லா-முருகர் ஆலயம், திருப்புகழ் பெற்றது.

வாகைக்குளம் :—திருநெல்வேலி ஜில்லா-முருகர் ஆலயம். திருப்புகழ் பெற்றது.

வாலிகொண்டபுரம் :—திருச்சிராப்பள்ளி ஜில்லா-முருகர்-ஆலயம்-திருப்புகழ்பெற்றது.

விராலிமலை :—திருச்சிராப்பள்ளி ஜில்லா - சுப்பிமண்யஸ் தலம்-திருப்புகழ் பெற்றது.

விநயகமலை :—மதுரை ஜில்லா-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

வெண்ணெய்மலை :—ஈரோடு ஸ்டேஷனுக்கு அருகிலுள்ளது. தண்டாயுதபாணி ஆலயம்-கோடைகாலத்தில் இங்கு ஒரு பாறை குளிர்ச்சியா யிருக்கிறது.

வெள்ளிகரம் :—சித்தூர் ஜில்லா-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

வெள்ளிமலை :—திருவாங்கூர் ராஜ்யம்-சுப்பிரமணியஸ் தலம் - திருப்புகழ் பெற்றது-

வேங்கடம் :—(திரு)ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா-திருநெல்வேலி ஜில்லா-சுப்பிரம்மண்யர் கோயில்-திருப்புகழ் பெற்றது.

வேப்பஞ்சந்தி :—திருச்சிராப் பள்ளி ஜில்லா-முருகர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

வேப்பூர் :—விழுப்புரம் தாலூகா-சுப்பிரமண்யர் ஆலயம்-திருப்புகழ் பெற்றது.

ஸ்ரீபுருஷமங்கை :—திருநெல்வேலி ஜில்லா-முருகர் ஆலயம்-திருப்புகழ்பெற்றது.

ஸ்ரீமுஷ்ணம் :—சிதம்பரம் தாலூகா-தஞ்சாவூர் ஜில்லா-சுப்பிரமண்யர் கோயில்.

ஸ்ரீவைகுண்டம் :—திருநெல்வேலி ஜில்லா-(பிரபல விஷ்ணுஸ்தலம்) இங்கொரு சுப்பிரமண்யர் கோயில் உளது.

Printed at the Premier Art Press, Madras.
M.S.—16 c. 500. 11—10—'47.